**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 291/2022 PW1**

06.11.2025 **வா.சா.1 கோதாவரி சத்திய வாக்குமூலத்தின் பேரில் 6 முதல் 8 மற்றும் 10, 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

சொத்தில் பங்கு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எத்தனை இலக்க சொத்தில் பங்கு கோரியுள்ளேன் என்று கேட்டால் வீடு, காலிமனை ஆகியவற்றில் 8ல் 1 பாகத்தை கோரியுள்ளேன். வழக்கு சொத்தில் சர்வே எண் தற்போது நியாபகம் இல்லை. ஏறக்குறைய 5000 சதுரடிக்கு குறையாமல் விஸ்தீரணம் உடைய சொத்தானது மேற்படி சர்வே எண்ணில் வரும். மேற்கில் வீரராகவன் முதலியார்- கண்ணம்மாளுக்கு சொந்தமான சொத்து, கிழக்கு பக்கத்தில் வாலாஜா என்பவர் பெயரில் முதலில் சொத்து இருந்தது அதன் பிறகு வெவ்வேறு நபர்களுக்கு கை மாறி விட்டது. தெற்கு பக்கத்தில் மனோன்மணி என்பவருக்கு சொந்தமான நிலம் உள்ளது. வடக்கு பக்கத்தில் சகுந்தலா என்பவருக்கு சொந்தமான ஒரு காலிமணை ஆரம்பத்தில் இருந்தது. நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, எனக்கு தெரிந்த விவரங்களை சொல்கிறேன். மேற்சொன்ன ஜக்குபந்திக்கு நடுவே உள்ள சொத்து எந்த சொத்து உள்ளது என்று கேட்டால் எனது அப்பா அம்மாவிற்கு சொந்தமான சொத்து உள்ளது. வழக்குரையை நான் படித்துப் பார்த்தேன். வழக்குரையில் கண்டுள்ள 2, 3, 4 அயிட்ட சொத்துக்களில் சர்வே எண் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்குரையில் கண்டுள்ள 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களைச் சுற்றி நான்கு திசைகளிலும் யார் யார் வசிக்கிறார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். 6ம் பிரதிவாதி என் மூத்த சகோதரி. 7 முதல் 11 பிரதிவாதிகள் என்னுடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகள் இறந்த கோவிந்தசாமியின் மனைவி, மகன்கள் மற்றும் மகள் என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் நல்ல நிலையில் இருக்கும் போது எனக்கு திருமணம் ஆனது என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் தான் எனக்கு திருமண சீர்வரிசைகளை செய்தார்கள் என்றால் சரிதான். எனது பெற்றோர்களுக்கு 8 குழந்தைகள் என்பதால் அவர்கள் சிரமப்பட்டு எனக்கு சீர்வரிசை செய்தார்கள். எனது அப்பா வாகன ஓட்டுநர் வேலை செய்து வந்தார். எனது அப்பா நல்ல வசதிவாய்ப்புள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றால் சரியல்ல. (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.